**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண்: 028/ந/2022

நாள்: 13.04.2022

செல்வி.மு.முர்சிதா பாத்திமா,
பேகம்பூர், திண்டுக்கல். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
தென்காசி நகராட்சி. – எதிர்மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், பேகம்பூர், வத்தலகுண்டு ரோடு, எண்.17/6, என்ற முகவரியில் வசிக்கும் மு.முர்சிதா பாத்திமா த/பெ. முகமது இக்பால் என்பவரின் 08.02.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.02.2022 அன்று பெறப்பட்டு 028/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை**

திண்டுக்கல் மாவட்டம், பேகம்பூர், வத்தலகுண்டு ரோடு, எண்.17/6, என்ற முகவரியில் வசிக்கும் மு.முர்சிதா பாத்திமா என்பவர் தனது மனுவில்:–

“எனக்கு தமிழ்நாடு அரசு தேயிலை தோட்ட கழகத்தின் சார்பாக (TANTEA) தேநீர் நிலையம் அமைக்க தென்காசி புதிய பேருந்து நிலையத்தின் உட்புறம் திருநெல்வேலி பஸ் நிறுத்தம் (நடைமேடை) கீழ்புறம் தென்காசி நகராட்சி ஆணையாளரால் 27.12.2021 அன்று எனக்கு அனுமதி வழங்கப்பட்டது. அங்கு பாக்ஸ் அமைத்து வயரிங் வேலை செய்து மின் இணைப்பிற்காக ஆணையாளரின் கடிதம் பெற்று கடை ஆரம்பிக்க சுமார் ஒரு மாத காலம் ஆனது. கடை ஆரம்பித்தவுடன் திடீரென்று இங்கு போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது என்று நகராட்சி ஆணையாளர் கடையை அகற்ற நிர்பந்திக்கிறார். நான் முறையாக தங்களிடம் அனுமதி பெற்று கடையை வைத்துள்ளேன் என்று கூறி கடையை தொடர்ந்து நடத்தி வருகிறேன். கடையை அகற்ற தொடர்ந்து நிர்பந்திப்பதால், அதை விசாரித்து தொடர்ந்து கடையை நடத்த பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு இம்முறைமன்ற நடுவ 08.03.2022 நாளிட்ட அறிக்கை வாயிலாக தென்காசி நகராட்சி ஆணையாளருக்கு ஆணையிடப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தென்காசி நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 29.03.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.03.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) 29.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரரின் சார்பாக மனுதாரரின் தந்தையான திரு.முகமது இக்பால் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

"எனது மகள் மு. முர்ஷிதா பாத்திமா அவர்களுக்கு தமிழ்நாடு அரசு தேயிலை தோட்டக் கழகத்தின் சார்பாக TANTEA நிலையம் அமைத்திட தென்காசி புதிய பேருந்து நிலையத்தின் உட்புறம் திருநெல்வேலி பஸ் நிற்கும் இடத்தில் 27.2.2021 அன்று நகராட்சியால் அனுமதி வழங்கப்பட்டு, கடை ஆரம்பிக்கப்பட்டது. பேருந்து பிளாட்பார்ம் முடியும் காலியிடத்தில் மேற்கண்ட கடையின் பெட்டி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது எனக் கூறி கடையை அகற்றக்கோரி நகராட்சியினர் நிர்பந்திக்கின்றனர்.

மேற்கண்ட எங்களது TANTEA நிலையத்தில் தேநீர், பிஸ்கட், ஜூஸ் போன்றவை விற்கப்படுகின்றன. மேற்கண்ட கடை அனுமதிக்கப்பட்ட இடத்தில் வைக்கப்படவில்லை என தெரிவித்து அங்குள்ள கடை வியாபாரிகளில் ஒருவரான திரு. காந்தைய்யா என்பவரின் தூண்டுதலின் பேரில் கடையை அகற்றிட நகராட்சியினர் நிர்பந்திக்கின்றனர். எனவே, நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட தென்காசி பேருந்து நிலையத்தில் மேற்கண்ட டேன் டீ நிலையத்தை நாங்கள் தொடர்ந்து நடத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5) 29.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் எதிர்மனுதாரரான தென்காசி நகராட்சி ஆணையாளர் திரு.சூ.மு.பாரிஜான் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

"தென்காசி நகராட்சி பேருந்து நிலையத்தில் TANTEA நிலையத்தை அமைத்திட மு.முர்ஷிதா பாத்திமா என்பவருக்கு அம்மா குடிநீர் நிலையத்திற்கு பக்கத்தில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. தற்போது மேற்கண்ட தென்காசி பேருந்து நிலையத்தில் அம்மா குடிநீர் நிலையம் தற்போதும் உள்ளது என்றும், ஆனால் கொரானா காலத்தையொட்டி அங்கு விற்பனை நடைபெறவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட மனுதாரர் மற்றும் அவரது தந்தை திரு. இக்பால், மேற்கண்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் TANTEA நிலையத்தை அமைக்காமல், திருநெல்வேலி பேருந்து நிற்கும் இடத்தில், மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக அமைக்கப்பட்ட சரிவு தளத்தை (Ramp) நடைபாதையை மறித்து தனது கடையை வைத்துள்ளார். மேலும், மேற்கண்ட

நிலையத்தில் TANTEA மட்டும் விற்பனை செய்யாமல், அக்கடையின் மூலம் தேநீர், பிஸ்கட், போண்டா, பஜ்ஜி போன்ற அனுமதிக்கப்படாத தின்பண்டங்களும் விற்பனை செய்யப்படுகிறது.

ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் மேற்கண்ட நிலையத்தை அமைக்காமல், தாழ்வு தளத்தை மறித்து தனது கடையை அமைத்துள்ளதால், மேற்கண்ட மனுதாரருக்கு 08.02.2022, 25.02.2022 ஆகிய நாட்களில் நகராட்சியால் அறிவிப்புகளும் 11.03.2022 அன்று இறுதி அறிவிப்பும் வழங்கப்பட்டது.

மேற்கண்ட கடை நடத்துவது தொடர்பாக பிரச்சனைகள் வர வாய்ப்பு உள்ளது என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனது 28.02.2022 நாளிட்ட கடிதத்தின் மூலம் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தக்க அறிவுரை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவரை கேட்டுக்கொண்டுள்ளார்.

அதன்படி 21.03.2022 அன்று காணொலி ஆய்வுக் கூட்டத்தின் போது, மேற்கண்ட நகராட்சி மூலம் ஒதுக்கப்பட்ட இடத்தில் மனுதாரர் கடைக்கான பெட்டியை வைத்திடவும், அக்கடையில் டேன் டீ தயாரிப்புகளை மட்டும் விற்பனை செய்ய தெரிவிக்குமாறும், தவறும் பட்சத்தில் குத்தகை உரிமத்தை ரத்து செய்திடவும் அறிவுறுத்தியுள்ளார். அதன்படி தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்திற்கும், மனுதாரருக்கும் தென்காசி நகராட்சி கடிதம் நாள் 21.03.2022ல் அறிவிப்பு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான எனது 24.03.2022 நாளிட்ட கடிதத்தையே எனது மேல்வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படியும் இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக நகராட்சியால் மனுதாரருக்கு அளிக்கப்பட்ட 08.02.2022, 25.02.2022 அன்று அனுப்பப்பட்ட நகராட்சி அறிவிப்புகளின் நகல்கள் 11.03.2022 நாளிட்ட இறுதி அறிவிப்பு மற்றும் தென்காசி காவல் கண்காணிப்பாளரால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் நகல் ஆகியவற்றை இம்முறைமன்றத்தில் சமர்பிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

6) தென்காசி நகராட்சி ஆணையாளர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள 24.03.2022 நாளிட்ட அறிக்கையில்:–

மனுதாரர் தமது 09.03.2022 நாளிட்ட மனுவில் மனுதாரருக்கு தென்காசி நகராட்சி பேருந்து நிலையத்தில் உட்புறம் திருநெல்வேலி பஸ் நிறுத்தம் கீழ்புறம் தென்காசி நகராட்சி ஆணையாளரால் அனுமதி வழங்கப்பட்டதாகவும், தற்போது போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது என கடையை அகற்ற நிர்பந்திப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தென்காசி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1757/17/அ2, நாள்.27.12.2021–ல் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழகம், குன்னூர்

அவர்களுக்கு புதிய பேருந்து நிலையத்தில் திருநெல்வேலி பஸ் நிறுத்தம் நடைமேடையில் அம்மா குடிநீர் பங்கின் கீழ்புறம் 8' x 8' என்ற அளவில் பெட்டிக்கடை வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால் மனுதாரர் நகராட்சி மூலம் ஒதுக்கப்பட்ட இடத்தில் 8' x 8' அளவில் பெட்டிக்கடை வைக்காமலும், டேன் டீ தயாரிப்பு பொருட்கள் விற்பனை செய்யாமல் மற்ற பொருட்களை விற்பனை செய்து வருவதற்கு புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கடை குத்தகை உரிமதாரர்களிடமிருந்து புகார் மனு 04.02.2022ல் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி மனுதாரருக்கு இந்நகராட்சி மூலம் ந.க.எண்.1757/18/எப்1 நாள்.08.02.2022ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி மனுவினை பெற்றுக்கொண்ட பின்பும், இந்நகராட்சியால் ஒதுக்கப்பட்ட இடத்தில் பெட்டியினை மாற்றியமைக்காததால் 25.02.2022–ல் இரண்டாவது அறிவிப்பும், 11.03.2022–ல் இறுதி அறிவிப்பும் வழங்கப்பட்டது.

இந்நிலையில் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் ந.க.எண்.147/ஒ/தபி/தென்/2822 நாள்.28.02.2022 கடிதத்தில் செல்வி. முர்ஷிதா பாத்திமா ராஜபாளையத்தில் SDPI கட்சியில் உள்ளதால், மேற்படி நபர், கடை நடத்துவதற்கு ஆதரவாக தென்காசியை சேர்ந்த SDPI கட்சி நிர்வாகிகள் செயல்படுவதாகவும், இதனால் மேற்படி பகுதியில் மதரீதியான பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிய வருவதால் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு தகுந்த அறிவுரை வழங்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தெரிவித்துள்ளார்கள்.

அதன்படி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக சட்ட ஒழுங்கு காணொலி ஆய்வுக்கூட்டம் நாள்.21.03.2022–ல் நகராட்சி மூலம் ஒதுக்கப்பட்ட இடத்தில் பெட்டிக்கடை வைக்கவும், TANTEA தயாரிப்புகளை மட்டும் விற்பனை செய்ய தெரிவிக்குமாறும், தவறும் பட்சத்தில் குத்தகை உரிமத்தை ரத்து செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது.

அதன்படி நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்திற்கும், மனுதாரருக்கும், அலுவலக ந.க.எண்.1757/2017/அ2, நாள்.21.03.2022–ல் அறிவிப்பு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேற்படி காரணங்களால் மனுதாரரை நகராட்சி மூலம் ஒதுக்கப்பட்ட இடத்தில் பெட்டிக்கடையை வைத்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வு குறித்து தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழக மேலாண்மை இயக்குநர், மனுதாரருக்கு அனுப்பியுள்ள தனது 18.03.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"In the meantime, it is learnt that, you have erected the sales bunk in Tenkasi New Busstand area without any prior intimation to this office. In this connection, the Commissioner Tenkasi Municipality in their letter in the reference 2nd cited (copy enclosed) complined that, you have erected the TANTEA sales Bunk in the area which was not allotted by the Tenkasi Municipality and also selling other products in TANTEA sales Bunk by violating the agreement conditions and issued show-cause notice for the same. Therefore you are requested to offer your explanation, if any for the said lapse immediately so as to give reply to Tenkasi Municipality in time".

7) இந்நேர்வில் மனுதாரரின் மனு, அவர் சார்பாக மனுதராரின் தந்தை அளித்த வாக்குமூலம், தென்காசி நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் பெட்டிக்கடையை இடம் மாற்றி அமைத்ததிற்கான மனுதாரரின் விளக்கம் கோரும் தமிழ்நாடு அரசு தேயிலை தோட்ட கழக மேலாண்மை இயக்குநரின் 18.03.2022 நாளிட்ட கடிதம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் தனது மனுவில் தமக்கு அரசு தேயிலை தோட்டக் கழகத்தின் சார்பாக டேன் டீ தேநீர் கடை அமைக்க தென்காசி புதிய பேருந்து நிலையத்தின் உட்புறம் திருநெல்வேலி பஸ் நிறுத்தம் நடைமேடைக்கு கீழ்புறம் ஆணையரால் 27.12.2021–ல் அனுமதி வழங்கப்பட்டது என்றும் தற்போது போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது எனக்கூறி கடையை அகற்ற கோருவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆணையாளர் தமது 27.12.2021 நாளிட்ட செயல்முறை ஆணையில் மனுதாரருக்கு திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்தில் பஸ் நிறுத்தம் நடைமேடையில் அம்மா குடிநீர் பங்கின் கீழ்புறம் 8' x 8' என்ற அளவில் பெட்டிக்கடை வைத்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டது. மனுதாரர் தமக்கு தென்காசி நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் TANTEA விற்பனை நிலையம் அமைக்காமல், மாற்றுத் திறனாளிகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் சரிவு தளத்தை மறித்தும் இடம் மாற்றி அமைத்தும் மற்றும் TANTEA பொருட்களை மட்டும் விற்பனை செய்யாமல் வேறு பொருட்களும் விற்பனை செய்தும் வந்ததால், இதற்கான விளக்கம் அளிக்குமாறு 08.02.2022 நாளிட்ட அறிவிப்பு, ஆணையாளரால் மனுதாரருக்கு வழங்கப்பட்டது. மனுதாரர், நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் விற்பனை நிலையத்தை அமைக்காமல், தொடர்ந்து வேறு இடத்தில் நடத்தி வந்ததால் மனுதாரருக்கு 25.02.2022–ல் இரண்டாவது அறிவிப்பும் மற்றும் 11.03.2022–ல் இறுதி அறிவிப்பும் வழங்கப்பட்டது.

8) மேலும் 21.03.2022 அன்று நடைபெற்ற தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக சட்ட ஒழுங்கு காணொலி ஆய்வுக்கூட்டத்திலும் இந்நேர்வு குறித்து விவாதிக்கப்பட்டு, நகராட்சி மூலம் ஒதுக்கப்பட்ட இடத்தில் மனுதாரர் பெட்டிக்கடை வைக்கவும், TANTEA தயாரிப்புகளை மட்டும் விற்பனை செய்ய தெரிவிக்குமாறும், தவறும் பட்சத்தில் குத்தகை உரிமத்தை இரத்து செய்திடலாம் என தீர்மானிக்கப்பட்டு, இதற்கான அறிவிப்பும் மனுதாரருக்கும், தேயிலை தோட்டக் கழகத்திற்கும் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில்

உள்ளது. இந்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவரின் ஆணைப்படி, தென்காசி நகராட்சியால் ஒதுக்கப்பட்ட இடத்தில் TANTEA விற்பனை செய்ய பெட்டிக்கடை வைக்கவும், TANTEA தயாரிப்புகளை மட்டுமே விற்பனை செய்யவும், மனுதாரருக்கு ஒரு குறிப்பிட்ட காலகெடுவை நிர்ணயித்து அறிவிப்பு வழங்கவும், அக்காலகெடுவிற்குள் பெட்டியை மாற்றி அமைக்க தவறும் பட்சத்தில், உரிய சட்டவிதிகளுக்குட்பட்டு மனுதாரரின் குத்தகை உரிமத்தை இரத்து செய்திட தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள தென்காசி நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) செல்வி.மு.முர்சிதா பாத்திமா,
17/6, வத்தலக்குண்டு ரோடு,
பேகம்பூர், திண்டுக்கல்.

2) ஆணையாளர்,
தென்காசி நகராட்சி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

18/4/22

செயலாளர்.

18/04/22

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை–600 032